<u>முதன்மை  மாவட்ட நீதிமன்றம், அரியலூர்</u>

**முன்னிலை :  திருமதி.T.மலர்வாலண்டினா, M.L.,**
**முதன்மை மாவட்ட  நீதிபதி,**
**அரியலூர்.**

2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம் ஆனி திங்கள் 17 ம் நாள்
2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ம் நாள் புதன்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.32/2022</u>**

1. பவுனு
2. செழியன்
3. கற்பகம் ……..வாதிகள்

//எதிர்//

1. தமிழரசி
2. தியாகராஜன்
3. செல்வராசு
4. சார்பதிவாளர், செந்துறை, ……பிரதிவாதிகள்

இவ்வழக்கானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் ஆர்டர் 7 ரூல் 1 ன் கீழ் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு தாவா அட்டவணைச் சொத்துக்களில் வாதிகளுக்குரிய 1/2 பாகத்தை பிரித்து தனி சுவாதினம் செய்து கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை வழங்க வேண்டியும், நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்துக்களில் 1/2 பாகத்தை பிரித்து நள இளப்பம் சரிகட்டி வாதிகளுக்கு தனி சுவாதீனம் வழங்கி, இறுதிநிலை தீர்ப்பாணை பிறபிக்க வேண்டியும், தாவா 2 வது அட்டவணைச் சொத்தில் 1 முதல் 11 சொத்துக்கள் பொறுத்து கடந்த 22.01.2022 ல் 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விளம்புகை செய்ய வேண்டியும், தாவா 2 வது அட்டவணைச் சொத்தில் 11 முதல் 15 சொத்துக்கள் பொறுத்து கடந்த 22.01.2022 ல் 1 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விளம்புகை செய்ய வேண்டியும், தாவா செலவு தொகை வேண்டியும் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது என் முன்பாக 01.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.SKP.மனோகரன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.NT.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 4ம் பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

இன்றும் வாதிகள் தரப்பில் எவரும் முன்னிலையாகவில்லை, வாதிகள் அழைத்தும் ஆஜராகவில்லை. பல வாய்தாக்கள் அளிக்கப்பட்ட போதிலும் வாதிகள் வழக்கை முன்னெடுத்துச் செல்ல தவறியுள்ளனர். எனவே, வாதி ஆஜராகாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாளன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

/ஒம்./ T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட நீதிபதி,
அரியலூர்.